விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 04 வெள்ளிக்கிழமை (16.02.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 59

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## முல்லைத்தீவில் தொடரும் விமானத் தாக்குதல்கள்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு நாயாறில் மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து மிக் -27ரக விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் 3 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். இத் தாக்குதல் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இடம் பெற்றது. தாக்குதலில் பொதுமக்களின் இரண்டு வீடுகளும் சேதமடைந்துள்ளன.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் குடியிருப்புப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் ஊழல்களை கண்காணிக்க ஜே.வி.பியால் சிறப்புக்குழு நியமிப்பு

(கொழும்பு)

அரசின் மிகப்பெரும் அமைச்சரவையினால் மேற்கொள்ளப்படும் ஊழல்களை கண்காணிப்பதற்கு சிறப்புக்குழுவை ஜே.வி.பி.நியமித்துள்ளது. இது அரசுக்கு எதிராக மக்களிடம் கருத்து மாற்றங்களை ஏற்படுத்தும் ஜே.வி.பியின் திட்டத்தில் ஒரு பகுதி என தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான முடிவுகள் அண்மையில் அக்கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ரோஹித பாகிஸ்தானுக்கு விஜயம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நாளை பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யவுள்ளார். பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சின் அழைப்பை யேற்று அமைச்சர் ரோஹித போகொல்லாகம இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

பாகிஸ்தான் விஜயத்தின்போது வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷராப் மற்றும் பாகிஸ்தான் (04 ஆம் பக்கம் பார்க்க)


# ஜனாதிபதி தலைமையிலான அரசில் அமைச்சுப் பொறுப்பை ஏற்பதில்லை

## முன்னாள் அமைச்சர் மங்கள உறுதி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசில் தான் அமைச்சுப் பொறுப்பை ஏற்கப் போவதில்லை என முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் தான் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினராக செயற்படப்போவதாகக் கூறினார். அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டமை தொடர்பாக அவர் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)



பிரித்தானிய பிரதி வெளிவிவகாரம் மற்றும் பொதுநலவாய நாடுகள் தொடர்பான அமைச்சர் கலாநிதி கிங் கொகவல்ஸ் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளார். இதன்போது வடக்கு கிழக்கு அபிவிருத்திகளுக்காக அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை பிரித்தானிய அமைச்சர் வரவேற்றுள்ளார்.

## இலங்கையில் சிவில் யுத்தம் கிடையாது பதில் தாக்குதல்களே இடம் பெறுகின்றது

### ஜனாதிபதி மகிந்த பேட்டி

(கொழும்பு)

இலங்கையில் சிவில் யுத்தமொன்று கிடையாதென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்துகின்றனர். படையினர் அவர்கள் மீது பதில் தாக்குதல் நடத்துகின்றனர் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தமிழன் எக்ஸ்பிரஸ் என்ற சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கு உண்டு. (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை யாழ்.மேல் நீதிமன்றத்திடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாவற்குழி ,கைதடி ,கோவிலாக்கண்டி ,தச்சன் தோப்பு மற்றும் தனங்கிளப்பு பகுதியில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் தொடர்பான சுமார் 25 ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகளை சாவகச்சேரி நீதிவான் யாழ்.வடமாகாண மேல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்தியுள்ளார்.

1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாவற்குழி ,கைதடி,கோவிலாக்கண்டி, தச்சன் தோப்பு ,தனங்கிளப்பு போன்ற பகுதிகளில் இடம் பெற்ற இராணுவ சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டு காணாமல் போனதான கூறப்பட்ட நபர்களை நீதிமன்றிலே முற்படுத்துமாறு (04 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸில் சரணடைந்த 14 பேரை கொழும்புக்கு அனுப்ப உத்தரவு !

### நீதிபதியின் தலையீட்டால் யாழில் தடுத்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

உயிர் அச்சுறுத்தல் காரணமாக யாழ். பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த 14 பேரை அவசர காலச் சட்டத்தை பயன்படுத்தி நேரடியாக தம்மிடம் ஒப்படைக்குமாறு புனர்வாழ்வு பாதுகாப்பிற்கான ஆணையாளர் சுகத் கம்லத் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சரணடைந்த 14 பேரையும் கொழும்புக்கு அழைத்து புனர்வாழ்வு முகாமில் வைப்பதற்காகவே அவர் இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

எனினும் குறித்த புனர்வாழ்வு பாதுகாப்பு ஆணையாளரின் உத்தரவு தொடர்பாக சரணடைந்தவர்களின் உறவினர்கள் யாழ்.மாவட்ட நீதிமன்றத்திற்கு அறிவித்ததையடுத்து நீதிவான் இ.த.விக்னராஜா இவ் விடயம் தொடர்பாக பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவின் கவனத் (04 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண நிலைவரம் தொடர்பாக 20 ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக கேட்டறிந்த தகவல்களை எதிர்வரும் 20 ஆம் திகதி அறிக்கை வடிவில் சமர்ப்பிக்க முடிபு செய்துள்ளதாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மனித உரிமைக் குழுவின் தலைவரும் மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சருமான மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் இடம் பெறும் மனித உரிமைகள் தொடர்பாக பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் தகவல்கள் பெறப்பட்டுள்ளது. அதனை அறிக்கை வடிவில் தயாரித்து ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மனித உரிமைக் குழுவிடம் சமர்ப்பிக்கவுள்ளேன்.

அதன் தலைவர் என்ற ரீதியில் ஆராய்ந்த தகவல்கள் தொடர்பான அறிக்கையை துறை சார்ந்த அறிஞர்கள் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பர் என அவர் கூறினார்.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் பத்திரிகை அச்சிடும் தாள் இன்மையால் குறைந்த பக்கங்களில் பத்திரிகைகள் வெளிவருவதாக தன்னிடம் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறிய அமைச்சர் அவற்றை எடுத்துவர பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கவில்லை எனவும் தான் தெரிந்து கொண்டதாகவும் அவர் கூறினார். இவ் விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் உறுதியளித்துள்ளார். (ச-5)

## ஐ.நா.பிரதிநிதி அலன் றொக்கில் தவறில்லை வழங்கப்பட்ட தகவல்களிலேயே தவறு !

### என்கிறார் அமைச்சர் ஹெகலிய

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு பிரதிநிதியான அலன் றொக்கின் அறிக்கைக்கு அவருக்கு வழங்கப்பட்ட தவறான தகவல்களே காரணம். எனவே அது தொடர்பாக தன்னால் வெளியிடப்பட்ட கருத்துகளை மீளப்பெற்றுக் கொள்வதாக பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, கிழக்கில் கடத்தப்பட்டவர்களின் பெற்றோரும், உறவினரும் தவறான தகவல்களை வழங்கியுள்ளனர். அதுதற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இந்தியக் கடலில் பிடிபட்ட படகு விடுதலைப்புலிகளினுடையது

## தமிழகப் பொலிஸார் தெரிவிப்பு

(சென்னை)

கோடியக்கரை கடற்பிரதேசத்தில் கடந்த செவ்வாய் அன்று இந்தியக் கரையோரப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட ஆயுதம் தாங்கிய படகு இலங்கையைச் சேர்ந்தது எனவும் அது தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் படகு என்றும் தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது தமிழகப் பொலிஸ் தலைவர் பி.முகர்ஜி இவ்வாறு கூறினார்.

இப்படகில் இருந்த நான்கு பேர் இலங்கையைச் சேர்ந்தவர் என்றும் ஒருவர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் என்றும் அவர் கூறினார்.

இவர்களில் ஒருவர் கடற்புலிகள் பிரிவைச் சேர்ந்தவர் என்றும் மற்றவர் விடுதலைப்புலிகளின் வாகன ஓட்டுநராகப் பணியாற்றுபவர் என்றும் தெரியவந்திருப்பதாகவும் பொலிஸார் கூறினார்.

இப் படகு இரணதீவிலிருந்து யாழ்ப்பாணத்தின் வடக்குப் பகுதியை நோக்கிச் செல்கின்ற வழியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினரிடமிருந்து தப்பிச் சென்றபோது இந்தியக் கடலோரப் பொலிஸாரிடம் பிடிபட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தியக் கடலோரப் பொலிஸார் கண்காணிப்புப் பணியில் ஈடுபட போதுமான ஆட்கள், தொழில்நுட்ப வசதிகள் இல்லாத குறைகள் காரணமாக சுமார் ஆயிரம் கிலோ மீற்றர் நீளமுள்ள தமிழகக் கடற்கரையின் சில பகுதிகளை ஆயுதக் கடத்தலுக்குப் பயன்படுத்தப்படுவதாக இந்தியப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஜெயகரன், சுகுமார், ரஞ்சித்குமார் ஆகிய மூன்று பேர் கைது செய்யப்பட்டதாகவும் இவர்களிடமிருந்து 3 ஆயிரத்து 200 கிலோ எடையுடைய அலுமினிய உலோகக் கட்டிகள் கைப்பற்றப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார். (ச-3)

# சர்வகட்சிக் குழுவில் கலந்து கொள்ளுமாறு அரசு விடுத்த அழைப்பை ஜே.வி.பி. நிராகரிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சர்வகட்சி ஆலோசனைக் குழுவில் மீண்டும் இணைந்து கொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகியவற்றுக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அழைப்பை சர்வகட்சி ஆலோசனைக்குழுவின் தலைவரும் அமைச்சருமான திஸ்ஸ விதாரண அந்தந்தக் கட்சித் தலைவர்களைச் சந்தித்து நேரடியாக விடுத்துள்ளார்.

சர்வகட்சி ஆலோசனைக் குழுவில் தங்களது பிரதிநிதியை மீண்டும் இணைத்துக் கொண்டு இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் தயாரிப்பதற்குக் கட்சியின் பூரண ஒத்துழைப்புக்களை வழங்குமாறு அமைச்சர் திஸ்ஸ விதாரண, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவையும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்து அழைப்பு விடுத்துள்ளார்.

அமைச்சரினால் விடுக்கப்பட்ட அந்த அழைப்பை மக்கள் விடுதலை முன்னணி முற்றாக நிராகரித்துவிட்டதுடன் நாட்டின் இறைமைக்குப் பங்கத்தை ஏற்படுத்தக் கூடிய வகையிலான எந்தத் தீர்வுத் திட்டத்திற்கும் ஜே.வி.பி. ஒருபோதும் துணை போகாது என்பதே கட்சியின் கொள்கையாகும்.

இதனால் இந்த சர்வகட்சி ஆலோசனை குழுவில் இணைந்து கொள்வதில் ஜே.வி.பிக்கு உடன்பாடு இல்லை என்று அமைச்சரிடம் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை அரசாங்கத்தினால் மீறப்பட்டு விட்டதனால் இந்த ஆலோசனைக் குழுவில் மீண்டும் இணைத்துக் கொள்வது குறித்து கட்சியின் மத்திய குழுவே கூடித் தீர்மானிக்க வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் தெரிவித்துள்ளார். (எ-1)

## சான்றிதழ் பெற கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சியை முடித்த முதலாம், இரண்டாம் அணியினருக்கு கடந்த வருடம் வழங்கப்பட்ட சான்றிதழை பெற்றுக் கொள்ளாதவர்கள் நாளை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பெற்றுக் கொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (ச)

## நேர்முக விசாரணை

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்துச் சீரின்மையால் யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள கல்வி சாரா அரச அலுவலர்களுக்கான நேர்முக விசாரணை நாளைக் காலை 9 மணிக்கு யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ச)

## பட்டப்பின் கல்வி டிப்ளோமா 19 ஆம் திகதி முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப் பீட நிர்வாகத்தின் கீழ் நடைபெற்று வரும்கல்வித் துறைப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

முழுநேரக் கற்கை நெறி விரிவுரைகள் எதிர்வரும் 19 ஆம் திகதியும் பகுதிநேரம் I இன் விரிவுரைகள் 24 ஆம் திகதி காலை 9 மணிக்கும் ஆரம்பமாகும் என கலைப்பீடாதிபதி அறிவித்துள்ளார். (ச)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் நடாத்தும் சைவப் புலவர், இளஞ்சைவப் புலவர் தேர்வுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம் மாதம் 28 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை, தலைவர், அகில இலங்கை சைவப் புலவர் சங்கம், கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் என்னும் முகவரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கின்றார். (ச)

# பேச்சுவார்த்தைகள் தொடர்பில் நோர்வேக்குப் பொறுப்பு உண்டு

## பாலித ஹோகன்ன தெரிவிப்பு



(பிஜிங்)

பயங்கரவாதத்திற்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபை ஒருவிதமாக செயற்படவிட்டு மற்றொரு விதமாக இலங்கை செயற்பட செல்வது ஏன் என இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித ஹோகன்ன கேள்வி எழுப்பியுள்ளார். சீனாவில் பிஜிங்கில்இடம்பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை பயங்கரவாத நடவடிக்கைக்கு எதிராக இனி முறைப்படியாகச் செயற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். விடுதலைப்புலிகளுக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கை தொடர்பாக சர்வதேச சமூகத்தினது கருத்துக்களை கலாநிதி பாலித ஹோகன்ன நிராகரித்தார்.

ஏனைய நாடுகள் பயங்கரவாதத்திற்கு எதிராகச் செயற்படுவது போன்றே இலங்கையும் செயற்படுகின்றது. எந்தவொரு நாடும் பயங்கரவாதிகளுடன் கொஞ்சி குழாவுவதில்லை.

எனினும் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை தொடர்வதில் நோர்வேக்கு இன்னும் பொறுப்புக்கள் இருப்பதாக இலங்கை அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் விடுதலைப்புலிகள் தமது கொள்கைகளை நிறைவேற்றிக் கொள்ள மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு ஏற்ப அரசாங்கமும் செயற்படுமென வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித ஹோகன்ன பிஜிங்கில் தெரிவித்திருந்தார். (ச-5)

## ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கான விசேட கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு பல்கலைக்கழக ஊழியர் பொது அறையில்இடம்பெறவுள்ளது. ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு சில வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக இச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மருந்தகத்திலிருந்து மருந்து விநியோகத்திற்காக மருந்துகளைப் பெற்றுக் கொண்ட மருந்தக உரிமையாளர்களுக்கு அவ் விநியோகம் தொடர்பாக எதிர்வரும் 19 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக் கூட்டத்திற்கு குறிக்கப்பட்ட மருந்தக உரிமையாளர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

# சிவனின் அருளால் அனைவருக்கும் சௌபாக்கியமும் சுகமும் உண்டாகட்டும்

## யாழ்.இராணுவத் தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினமான இன்று சிவனின் அருளால் அனைவருக்கும் சமாதானமும் சௌபாக்கியமும் உண்டாகட்டும் என யாழ். இராணுவத் தளபதியின் சிவராத்திரி தினச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆதிகாலம் தொட்டு உலகம் பூராகவும் உள்ள இந்து பக்தர்கள் பக்தியுடன் கொண்டாடும் மகா சிவராத்திரி வைபவம் யாழ்.பிரதேசத்தில் வாழும் இந்துக்களுக்கும் மிக முக்கிய வைபவம் என்பதை நான் அறிவேன்.

இம்முறை பெப்ரவரி 16 ஆம் திகதி கொண்டாடும் சிவராத்திரி, யாழ்.மக்கள் மட்டுமன்றி உலக வாழ் இந்து மக்கள் ஒன்றிணைந்து பயபக்தியுடன் ஒரே நேரத்தில் சிவ பெருமானுக்கு நடாத்தும் பூஜை வழிபாடுகள் மூலமும் உபவாசம் இருந்தும் பக்தியை வெளிப்படுத்தி செல்வத்தையும் சமூகத்தின் விடிவை, நல்லொழுக்கத்தை, மேம்பாட்டை வேண்டி நடத்தும் பூஜை வழிபாடாகும்.

இன்று நீங்கள் கொண்டாடும் மகா சிவராத்திரியின் பயனால் உங்கள் மேன்மையான எண்ணங்கள் நிறைவேறி உங்கள் வாழ்வு சௌபாக்கியமுள்ளதாக் ஆவதற்கும் சிவனின் அருளால் அனைவருக்கும் சமாதானமும் சௌபாக்கியமும் நற்சுகமும் நீண்ட ஆயுளும் சிறந்த எதிர்காலமும் மலர வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன் என்றுள்ளது. (ஏ)

## மருந்து விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுகாதாரத் திணைக்களத்தில் இதுவரை காலமும் மருந்துகளிற்கு பதிவு செய்து பணம் செலுத்தியவர்கள் தங்களிற்கான மருந்துகளை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னதாக அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இனிவரும் காலத்தில் எமது திணைக்களத்தினால் மருந்துப் பதிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது. நோயாளர்களுக்கு அவ்வப் பகுதிகளிலுள்ள மருந்தகங்கள் மூலம் மருந்துகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதுபற்றிய பூரண விபரங்கள் விரைவில் அறியத் தரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## நடமாடும் மருத்துவ ஆய்வுகூட சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுகாதார திணைக்களத்தின் நடமாடும் மருத்துவ ஆய்வுகூட சேவை எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் சில வைத்தியசாலைகளில் நேர அட்டவணையின் பிரகாரம் நடைபெறவுள்ளது.

திங்கட்கிழமை அச்சுவேலி வைத்தியசாலையிலும் செவ்வாய்க்கிழமை சங்கானை வைத்தியசாலையிலும் புதன்கிழமை காரைநகர் வைத்தியசாலையிலும் வியாழக்கிழமை கோப்பாய் வைத்தியசாலையிலும் வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை வைத்தியசாலையிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# தேசிய அடையாள அட்டையின்றி பரீட்சைக்குத் தோற்ற முடியாது

இவ்வாண்டு நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையங்களில் கட்டாயம் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டுமென பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந் நிபந்தனை தனியார் மற்றும் பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்குப் பொருந்தும் என திணைக்களம் அறிவித்துள்ளது. இதேவேளை பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் சகல பரீட்சைகளின் போதும் தேசிய அடையாள அட்டையை பரீட்சை நிலையங்களில் சமர்ப்பிக்கப் பரீட்சார்த்திகளைக் கோருவதற்கு திணைக்களம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது நடைபெறும் பரீட்சைகளில் பரீட்சார்த்திகள் தங்களை அடையாளப்படுத்த கடவுச்சீட்டு, தபால் அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் என்பவற்றை சமர்ப்பித்து வருவது குறிப்பிடத்தக்கது. (எ-5)


## சிறு விளம்பரம்

**மணமகன் தேவை**

யாழ்.இந்து வேளாளர் 1979 அவிட்டம் கும்பராசி 8 இல் சூரியன் செவ்வாய், கிரக பாவம் 71 1/4, உயரம் 5' 4" சிவந்த மேனி B.Sc. பட்டதாரி ஆசிரியைக்கும் 1981 திருவோணம் மகரராசி 49 3/4 கிரகபாவம். 5' 2" உயரம் மாநிறம் G.C.E. A/L வெளிவாரிப் பட்டதாரி மணப்பெண்ணுக்கும் அரச பணி புரிபவர், U.K, கனடா, அவுஸ்திரேலியா மணமகனும் விரும்பத்தக்கது. தொடர்புக்கு சிவாலயா சர்வதேச திருமண நிலையம், 389C, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி. (பூங்கனிச்சோலை அருகில்). T.P. 021 222 6662, 077 5834982. (620)

ஒவ்வொரு நாளும் சிறிய நன்மைகளுக்காக ஆன்மாவை விற்பதைத் தவிர வேறுஎன்ன செய்கின்றார்கள் மனிதர்கள்?
-பெர்னார்ட்ஷா

வலம்புரி

# தென்னிலங்கையில் நடக்கும் அரசியல் குத்துக்கரணம்

தென்னிலங்கை அரசியல் நாளுக்கு நாள் மாற்ற மடைகின்றது. பதவி விலக்கப்பட்ட மூன்று அமைச்சர்களில் அநுரா பண்டார நாயக்கவிற்கு மீண்டும் அமைச்சுப் பதவி வழங்க ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ உடன்பட்டுள்ளார்.

அநுராவுக்கு மீண்டும்அமைச்சுப் பதவி வழங்கும் முடிவை ஜனாதிபதி எடுத்ததற்கான காரணம் என்ன? இதுவே இலங்கை அரசியலில் தற்போது முக்கியத்துவம் பெற்ற விடயமாகவுள்ளது.

அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கிய ஒருவருக்கு மீளவும் அதனை வழங்குவதாயின் அதற்கு இருக்கக் கூடிய ஒரே காரணம் அமைச்சுப் பதவியை நீக்கியமை தவறானதென்பதாகவே அமையும்.

தவறு செய்த ஒருவரை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கினால் அவரை மீளவும்பதவியில் அமர்த்துவது சட்டத்திற்கு முரணானதாகும். இருப்பினும் நாட்டின் ஜனாதிபதிக்கு இருக்கக் கூடிய நிறைவேற்று அதிகாரத்திற்கு அமைய அமைச்சுப் பதவியை நீக்குவதும், விலக்குவதும் 'நான் அசைந்தால் அசையும் அமைச்சரவையே' என்ற அதிகார வலுவிற்குட்பட்டதாகும்.

இதற்கு அமைவாகவே ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ; அநுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராட்சி ஆகிய மூவரினதும் அமைச்சுப் பதவிகளை நீக்கினார்.

இப்போது அநுரா பண்டாரநாயக்கவின் அமைச்சை மீளவும் வழங்குவதற்கு ஜனாதிபதி மகிந்த உடன்பட்டதற்கு பல காரணங்கள் உண்டு. அதில் பண்டார நாயக்க குடும்பத்தில் தான் கைவைப்பதாக மக்கள் கருதினால் எதிர்காலத்தில் அது தனக்குப் பாதகமாக அமையும் என ஜனாதிபதி மகிந்த கருதியிருக்க வேண்டும்.

எனவே அநுராவிற்கு அமைச்சுப்பதவியை மீளவும் வழங்குவதன் ஊடாக, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சமாளித்து நிலைமையை சுமுகமாக்குவதும், அதேநேரம் எதிரிகளின் பலம் அதிகரிப்பதைத் தடுப்பதும் அதில் இருக்கக் கூடிய நோக்கமாகும்.

அதாவது அநுரா, மங்கள, சூரியாராட்சி என்ற மூவரினதும் கூட்டுப் பலமடைந்தால் அது தனக்கும் அரசுக்கும் பாதகமாக அமையும் எனக் கருதிய ஜனாதிபதி மகிந்த, அநுராவைத் தன் பக்கம் இழுத்து எதிரிகளின் பலத்தை வலுக்குறைக்க முற்பட்டுள்ளார்.

அவரின் நோக்கத்திற்கு அநுரா உடன்பட்டதால் இப்போது பதவி நீக்கப்பட்ட மங்கள மற்றும் சூரியாராட்சி ஆகியோரின் எதிர்ப்பு நடவடிக்கைகள் சீர்குலைந்து போயுள்ளன.


அவ்வகையில் ஜனாதிபதி மகிந்தவின் காய்நகர்த்தல் வெற்றி தந்துள்ளது என்றே கூற வேண்டும். ஆனால் தென்னிலங்கையில் அடிக்கடி ஏற்படும் அரசியல் குழப்பம் நாட்டையும், பொதுமக்களையும் மிக மோசமாகப் பாதிக்கும் என்ற உண்மை உணரப்பட வேண்டியதாகும்.

ஸ்திரத்தன்மை இல்லாத ஓர் அரசாங்கத்தினால் இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணவோ, சமாதானத்தை ஏற்படுத்தவோ முடியாது. அதேசமயம் அமைச்சரவையில்அடிக்கடி மாற்றமும் பதவிப் பறிப்பும் நடந்தால் அதனால் வருகின்ற குழப்பங்கள் தலையெடுக்குமே தவிர, மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காமல் போகும்.

எனவே தென்னிலங்கையில் இடம்பெற்று வரும் அரசியல் குழப்பங்கள் நாட்டில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை மட்டும் இப்போதைக்குக் கூறிக்கொள்ளலாம்.

# நம்பிக்கை வைத்துச் செயற்பட்டால் சமாதானத்தை ஏற்படுத்த முடியும்!

## பிரித்தானிய அமைச்சர் தெரிவிப்பு



(மட்டக்களப்பு)

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதுஎன்பது கடினமான காரியமாக தற்போது மாறியுள்ளது. இருந்த போதிலும் நம்பிக்கை வைத்துச் செயற்பட்டால் சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

வட அயர்லாந்தின் அனுபவத்தினை கருத்தில் கொண்டு இலங்கை செயற்பட்டால் விரைவில் சமாதானத்தை ஏற்படுத்தலாம் என்று இலங்கை வந்துள்ள பிரித்தானியாவின் வெளியுறவு மற்றும் பொதுநலவாய நாடுகளுக்கான அமைச்சர் கிம் ஹெவல்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் பிரித்தானியா மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என்றும் அவர் கூறினார். நேற்று முன்தினம் பிரித்தானிய அமைச்சர் கிம் ஹெவல்ஸ் அம்பாறை மாவட்டத்திற்குச் சென்று பலதரப்பட்டவர்களையும் சந்தித்துப் பேசினார்.

காரைதீவு கண்ணகி சனசமூக நிலையத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அவர்மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு உரையாற்றிய பிரித்தானிய அமைச்சர் மேலும் கூறியதாவது;

பல்லின மக்கள் வாழ்கின்ற இலங்கையில் இப்போதிருக்கின்ற பிரச்சினையைப் போன்று பிரித்தானியாவிலும் வட அயர்லாந்துப் பிரச்சினை இருந்தது. இலங்கையில் ஏற்கனவேயிருக்கின்ற இன முரண்பாட்டுப் பிரச்சினைக்கு மேலதிகமாக சுனாமிப் பிரச்சினையும் இருக்கின்றது.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதில் பிரித்தானியா மிகவும் ஆர்வமாகவிருக்கின்றது. வட அயர்லாந்துப்பிரச்சினை முடிபுக்குக் கொண்டு வருவதற்குத் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட பிரித்தானியாவைச் சேர்ந்த போல் மேர்பி இலங்கைக்கு வருகை தந்து இங்குள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து எமக்குக் கூறியுள்ளார்.

அவர் இலங்கையிலுள்ள பல்வேறு மக்களிடையே சமூகங்களுக்கிடையேயும் சக வாழ்வை ஏற்படுத்துவதற்கு அடிப்படைத் தேவையாக சண்டை நடைபெறாதிருக்க வேண்டுமென்று என்னிடம் கூறினார்.

இதுகேட்பதற்கு எளிமையாகவிருக்கலாம். ஆனால் ஆழமானது. வட அயர்லாந்தில் 30 வருடங்களாகத் தீர்க்கப்படாதிருந்த பிரச்சினை பற்றிய அனுபவம் எமக்கிருக்கின்றது. கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்தினருக்கும் இடையே ஒருமைப்பாடு ஏற்படும் என்று எதிர்பார்க்கவில்லை.

இந்த இரண்டு பகுதியினருக்குமிடையே யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்தினோம். அந்த யுத்த நிறுத்தமானது நீடித்து நிலைத்து நிற்கக் கூடியதாகவிருந்தது.

அதனால் வெவ்வேறுபட்ட மக்களிடையே ஒருமைப்பாட்டிற்கான அடிப்படையை ஏற்படுத்த முடிந்தது. இப்போது அங்கு சமாதானம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடைந்துள்ளார்கள். அவர்கள் ஒருவர் மற்றவர் மீது அன்பு செலுத்தாதிருக்கலாம்.ஆனால் ஒருவர் மற்றவரில் இருக்கின்றார்கள்.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதென்பது கடினமான காரியமாகவே இப்போதைக்கு இருக்கின்றது. ஆனால் நீங்கள் நம்பிக்கை வைத்துச் செயற்பட்டால் சமாதானத்தை அடைந்து கொள்ளலாம். வட அயர்லாந்தின் அனுபவத்தைப் போன்று இலங்கையிலும் செயற்படும்போது விரைவில் சமாதானம் ஏற்படும். (எ-5)

# யுத்த நிறுத்த ஒப்பந்தம் முறிவடைந்தால் அது பாரிய யுத்தத்திற்கு வழிவகுக்கும்

## சிவாஜிலிங்கம் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கை முறிவடையுமானால் அது பாரிய யுத்தத்திற்கு வழிவகுக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே இருக்கக் கூடிய யுத்த நிறுத்த உடன்படிக்கை இரு தரப்பினர்களுக்கும் இடையே ஒரு இராணுவ சமநிலை ஏற்பட்டதன் ஊடாக ஐந்து வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்டது.

ஆனால் இன்று அந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையின் மூலம்தான் ஒரு சமாதானமான அமைதியான சூழ்நிலை நிலவிவந்தது. கடந்த ஆண்டில் பிரகடனப்படுத்தப்படாத யுத்தத்தின் மூலம் மிகப் பெரியதொரு மனித அவலத்தை எங்களுடைய மக்களும் இந்த நாடும் சந்திக்க வேண்டி ஏற்பட்டது என்றார்.

எனவே இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அமுல்படுத்த அரசாங்கம் முன்வர வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கேட்டுள்ளது. அதனைவிடுத்து தேசிய பிக்கு முன்னணியின் கோரிக்கைக்கு செவிசாய்த்து போர்நிறுத்த ஒப்பந்தத்தை அரசு கிழித்து வீசுவதாயின் அல்லது அதில் இருந்து விலகிக் கொள்ளுமாயின் நாடு மிகப்பெரிய ஒரு யுத்தத்திற்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என செய்திச் சேவை ஒன்றுக்குஅவர் அளித்த நேர்காணலில் இவற்றைத் தெரிவித்துள்ளார்.

(ச-3)

# வெள்ளி நற்சிந்தனை

## நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

மனிதனுடைய நாளாந்தக் கடமைகளில் தலையாயது வழிபாடாகும். தனக்கு முன்னே வாழ்ந்தவர்களுடைய வாழ்வியலின் நெறியில் செல்லுவதே மனிதனை மகிழ்வூட்டும். எமது வாழ்க்கைச் செல்நெறியில் இடையிலே தோன்றும் ஊறுகளை நீக்குவதற்கு முன்னோர் நல்லதொரு வழியைக் காட்டியுள்ளனர்.

இயற்கை நிலையில் தோன்றும் வானவில்லின் வரவை எவரும் அறியமுடியாது. அதை முன்கூட்டியே உணரவும் வாய்ப்பில்லை. இதுபோலவே எமது வாழ்விலும் சில இடையூறுகள் முன்கூட்டியே அறிய முடியாமல் திடீரென ஏற்படும். அதனால் வாழ்க்கையே துன்பமாகத் தெரியும்.

இந்த இடையூறை நீக்குவதற்கு நல்ல வழியை நம்முன்னோர் காட்டி எம்மை வழிப்படுத்தியுள்ளனர். நமது முன்னோர் ஊர், பேர், உருவம் என்பவற்றை அறியாத ஒரு பேராற்றலை 'கடவுள்' எனப் பெயரிட்டு வழங்கினர்.

எல்லாவற்றையும் கடந்து நின்ற அந்தக் கடவுளின் கால்கள் நிலத்தில் படுவதில்லை என உணர்ந்தனர். அந்தக் கால் நிலம் தோயாத கடவுளை, நாம் எமது தலை நிலத்திற் பட வணங்கினால் எமது உள்ளத்தில் நினைக்கும் செயல்கள் யாவும் நிறைவேறும் என்பதை பட்டறிவால் கண்டு அதை எமக்கும் கற்பித்தனர்.

அவர்கள் கற்பித்த நடைமுறைகள் இயற்கையோடு ஒட்டிய காலக் கணக்கோடு இணைந்திருந்தன. காலை, இரவு, நாள்,வாரம், மாதம், ஆண்டு என எம்மால் முடிந்தவரை வழிபட பயிற்றினர். அதற்குச் சிறப்பான பெயர்களையும் வழங்கியிருந்தனர்.

அப்பெயர்களில் இரவு காலத்து வழிபாடென இரு வழிபாடுகள் இன்றுவரை எம்மிடையே நிலைத்துள்ளன. சிவராத்திரி, நவராத்திரி என அவை அழைக்கப்படுகின்றன. சிவராத்திரி சிவனை வழிபடும் இரவாக, விழித்திருந்து செய்யும் வழிபாடாக உள்ளது.

ஓரிரவை நான்கு பகுதிகளாக்கி வழிபாடு செய்யும் முறைமையும் வரையறை செய்யப்பட்டுள்ளது. வழிபாடு செய்வ

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

தற்கு எமது ஏனைய கடமைகள் பகல் வேளையில் தடையாக இருக்கலாம்.

எனவே எம் வாழ்வில் ஏற்படும் இடையூறுகளை தீர்ப்பதற்கு வழிபாட்டுக்கென ஓராண்டில் ஓரிரவை ஒதுக்கி வழிபடும் செயற்பாடு எல்லோருக்கும் நன்மை பயக்கும் வழிபாட்டுப் பயிற்சியாகும். நாம் நினைத்த காரியம் நிறைவேற நிலத்தில் வீழ்ந்து கடவுளை வழிபடுவதே சிறந்தது. இந்த ஆற்றுப்படுத்தலை நம்மவர் எமக்காக விட்டுச் சென்றுள்ளதை நாலடியார் காட்டுகிறது.

*'வானிடு வில்லின் வரவறியா வாய்மையாற்*
*கானிலந் தோயாக் கடவுளை-யாநிலஞ்*
*சென்னி யுறவணங்கிச் சேர்துமெம் முள்ளத்து*
*முன்னி யவைமுடிக வென்று'* -நாலடியார்: கடவுள் வாழ்த்து

# கல்விச் செயற்பாடுகளை தொடர அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம்

## துணைவேந்தர் குமாரவடிவேல் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்ள அனைத்துத் தரப்பினரும் உதவ வேண்டுமென யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக இடை நிறுத்தப்பட்டிருந்த கற்றல் செயற்பாடுகளை எதிர்வரும் 19 ஆம் திகதி மீள ஆரம்பிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந் நிலையில் அனைத்து தரப்பினரும் தம்மாலான ஆதரவினை வழங்குமாறு துணைவேந்தர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றுக் காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல்துறை மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை பௌதிகவியல் சங்கத்தினால் 2006 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட பௌதிகவியல் ஒலிம்பியாட் போட்டியில் அதிக கூடிய மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களிற்கான விருது வழங்கல் வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கல்வியானது எவராலும் அழித்துவிட முடியாத சொத்து இவற்றினைப் பாதுகாப்பது அனைவரது கடமையாகும். இந்நிலையில் அசாதாரண சூழ்நிலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான சூழ் நிலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான சகல வசதிகளையும் முழுமையான வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் கவலை வெளியிட்டார்.

யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறை மண்டபத்தில் துறைத்தலைவர் கலாநிதி நா.சிவயோகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேலும் சிறப்பு விருந்தினர்களாக பட்டபின் படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி ,சுண்டுகுளி மகளிர்கல்லூரி அதிபர் திருமதி துஷயந்தி துஷிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-3)

# ஐ.நா.பிரதிநிதி அலன் றொக்கில்...

அலன்றொக்கிற்கு மட்டு மல்லாது பொலிஸாருக்கும் ஏனைய அரச அதிகாரிகளுக்கும் தவறான தகவல்களே வழங்கப்பட்டுள்ளன.

எனவே அலன்றொக் எப்படி தவறாக வழி நடத்தப்பட்டார் என என்னால் உணரக்கூடியதாக இருக்கின்றது. தவறான தகவல்களைத் தான் அவர் தன்னிடம் உள்ள ஆதாரங்கள் எனக்கூறியுள்ளார்.

ஆராய்ந்து பார்க்கப்படாமல் கிடைத்த தகவல்களைக் கொண்டே முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உதாரணமாக சில முறைப்பாடுகளில் உறவினர்கள் அல்லது நண்பர்கள் வெள்ளைவானில் கடத்திச் செல்லப்பட்டது மட்டுமே தமக்குத் தெரியும் என கூறப்பட்டுள்ளது.

இது எவ்வாறெனில் வெள்ளைவானில் வருபவர்களே கடத்தலை மேற்கொள்வதாக அவர்கள் முன்னர் கேள்விப்பட்டதனால் உருவானது. ஆனால் விசாரணைகளின் போது அவர்களால் மேலதிக விபரங்களை கொடுக்க முடியவில்லை.

இதே போலவே அலன் றொக் தனது அறிக்கையில் தனது எண்ணங்கள் கருத்துள்ளவை என்பதை முதன்மைப்படுத்தியுள்ளார். யாரும் சரியான மனிதர்களாக இருக்க முடியாது. தவறுகள் நிகழத்தான் செய்யும் என்றார் அவர். (எ-5)

# யாழ்ப்பாணத்திலிருந்து நாளை கப்பல் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்-திருமலை பயணிகள் கப்பல் சேவை நாளை நடைபெறவுள்ளது. சுமார் 350 பேருடன் இக் கப்பல் புறப்படவுள்ளது.

இன்று யாழ்.சிங்கள மகாவித்தியாலயத்திலிருந்து பயணிகள் ஏற்றிச் செல்லப்படவுள்ளனர். இக் கப்பலில் பயணம் செய்வதற்காக சுமார் 2 ஆயிரம் பேர் வரையிலான பயணிகள் யாழ்.புகையிரத நிலையத்தில் நேற்றிரவு திரண்டிருந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (எ)

# முல்லைத்தீவில்...

பகுதி மீதே தாக்குதல் நடத் தப்பட்டுள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

இரு தடவைகள் தாக்குதல் நடத்தப்பட்ட வேளை பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் சிதறி ஓடி அவலப்பட்டனர். தாக்குதல் இடம் பெற்றுக் கொண்டிருந்த வேளையில் வேவு விமானம் தொடர்ச்சியாக அப் பகுதிகளை வட்டமிட்டுள்ளது.

வான்குண்டு வீச்சின் பின்னர் 12 மணி முதல் மணலாற் றுப் பகுதியிலிருந்து ஆட்லறி மற்றும் பல்குழல் எறிகணைத் தாக்குதலை செறிவாக நடத்தியுள்ளனர். மக்கள் குடியிருப்புக்களை அண்மித்து எறிகணைகள் செறிவாக வீழ்ந்து வெடித்துள்ளன என தெரிவிக்கப்பட்டது. (ச-5)


# காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானம் சிவராத்திரி விழா

காரைநகர் ஐயனார் தேவஸ்தானத்தில் இன்று மகா சிவராத்திரி விரதம் நான்கு சாமப் பூசை வழிபாடுகளுடன் இடம் பெறவுள்ளது.

இவ் விழாவில்

காரை பவப்பிரியன் குழுவினரின் நாதஸ்வர தவில் கச்சேரி இரவு முழுவதும் தொடராக இடம் பெறும்.



விழாவில்
தவில் வித்துவான் நர்மதன் (மது)
அவர்கட்கு
அமரர் காரை கணேசபிள்ளையா
ஞாபகார்த்த விருதும்,
தவில் லய சொரூபன் என்ற பட்டமும்
வழங்கி கௌரவிக்கப்படும்.

17.02.2007 அதிகாலை பூரணை பொற்கலை சமேத ஐயனார் தீர்த்தக் கரைக்கு எழுந்தருள்வார். பகல் விசேட பூசைகள் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து அடியவர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படும்.

மாலை 4 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் இடம் பெற்று,

எம்பெருமான் அழகிய பூந்தண்டிகையில் வீதியூலா வருவார். அடியார்கள் அனைவரும் வந்து எம்பெருமானின் இஷ்டசித்திகளை பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

இவ் நிகழ்வில் விசேட நாதஸ்வர தவில் கச்சேரி இடம் பெறும்.

தேவஸ்தான அறங்காவலர். உபயகாரர்கள்.

(த-617)


# பொலிஸில் சரணடைந்து...

திற்குக் கொண்டு வந்தார்.

இதனையடுத்து குறித்த 14 பேரையும் யாழ்.மாவட்ட நீதிமன்றில் ஒப்படைத்து ஏற்கனவே காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் போன்று யாழ்.சிறையில் வைக்குமாறு புனர்வாழ்வு ஆணையாளருக்கு பிரதம நீதியரசர் உத்தரவிட்டுள்ளார்.

உயிர்ப்பாதுகாப்பிற்கு சரணடைந்து யாழ்.நீதிமன்றில் காவலில் உள்ளவர்களுக்கான புனர்வாழ்வு அளிப்பதற்கு மிக விரைவில் தெல்லிப்பழையில் உள்ள புனர்வாழ்வு நிலையத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா புனர்வாழ்வு மற்றும் பாதுகாப்பு ஆணையாளர் சுகத் கம்லத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (ச)

# ஆட்கொணர்வு மனு மீதான...

2003 ஆம் ஆண்டில் யாழ். வடமாகாண மேல் நீதிமன்றில் தாக்கலிடப் பட்ட சுமார் 25 ஆட்கொணர்வு மனுக்கள் தொடர்பிலான விசாரணைகள் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் கடந்த 12 ஆம் திகதி முதல் நேற்று வரை தொடர்ச்சியாக நான்கு நாட்கள் நடைபெற்றன.

அவ் வழக்குகளில் சம்பந்தப்பட்ட காணாமல் போனவர்களை இராணுவத்தினரே கைது செய்ததற்கான போதிய ஆதாரங்கள் இருப்பதால் மேல் நடவடிக்கைகளுக்காக வழக்குகள் அனைத்தையும் யாழ்.வட மாகாண மேல்நீதிமன்றுக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதிவான் பாரப்படுத்தியுள்ளார். (ச-5)

# இலங்கையில் சிவில் யுத்தம்...

அதனால்தான் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கின்றோம்.

இந்த உள்நாட்டு நெருக்கடிக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வொன்றை முன்வைத்து நாட்டை சமாதானப் பாதையில் கட்டியெழுப்ப எனது அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது. சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு தீர்வுயோசனைகளைப் பற்றி ஆராய்ந்து வருகின்றது. அதிகாரப் பரவலாக்கம் பற்றிய தேசிய இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் ஆற்றல் இக் குழு வுக்கு இருக்கின்றது.

எனவே கருத்துக்களை வெளிப்படுத்தக் கூடிய ஜனநாயக மேடையாக சர்வ கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு நான் தமிழர் தேசிய கூட்டமைப்பிடமும் விடுதலைப்புலிகளிடமும் பல முறை கேட்டுள்ளேன்.

வட பகுதிக்குத் தேவையான உணவுப் பொருட்களை விரைவாக அனுப்பிவைக்க தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நாட்டு மக்களின் நலன்களைக் காப்பதில் அரசாங்கம் உறுதியுடன் செயலாற்றுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-1)

# அமைச்சர்...

பிரதமர் சௌகத் அஸீஸ் ஆகி யோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதன்போது இரு நாடுகளினதும் பொருளாதார அரசியல் மற்றும் கலை கலாசார தொடர்புகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்படும் என்று வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் போகொல்லாகம கல்விமான்கள் மற்றும் அரசியல் ஆய்வாளர்கள் ஆகியோருடன் சந்தித்து கலந்துரை யாடவுள்ளார். இதேவேளை பாகிஸ்தானில் நடைபெறவுள்ள இலங்கையின் சுதந்திர தினவைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார். (எ-1)

# அரசின் ஊழல்களை...

இந் நடவடிக்கை தொடர்பில் ஜே.வி.பி.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்ததாவது, அண் மைய சம்பவங்களில் ஐக்கிய தேசியக் கட்சி தனது எதிர்க்கட்சி தகுதியை இழந்து கொண்டு வருவது தெரிகின்றது.

எனவே எதிர்க்கட்சிக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு ஜே.வி.பிக்கு அதிகம் உண்டு. இன்றைய கால கட்டத்தில் இலங்கையில் பெரும்பான்மையுள்ள எதிர்க்கட்சி இல்லாது போய்விட்டது.

ஐக்கிய தேசியக்கட்சியின் அரசியல் பிரசன்னம் குறை வடைந்து வருகின்றது. அரச மட்டத்தில் நிகழும் ஊழல்களை ஐக்கிய தேசியக்கட்சி வெளிப்படுத்துவதில்லை.

அரசின் அமைச்சரவையில் நிகழும் ஊழல்கள் தொடர்பாக 'ஆராய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை ஜே.வி.பி.அமைத்துள்ளது. இக்குழு ஊழலில் ஈடுபடும் அமைச்சர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கும். மேலும் அரசினால் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும் திட்டங்கள் தொடர்பாகவும் ஜே.வி.பி.அதிக கவனம் செலுத்தும் என்றார் அவர். (ச-5)

# ஜனாதிபதி தலைமையிலான...

தன்னுடைய அமைச்சுப் பொறுப்பை ஜனாதிபதி பொறுப்பேற்றமையானது சொல்லாமல் தன்மை வெளியேற்றும் நடவடிக்கையாகும் என முன்னாள் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று மதியம் இடம் பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர் ஜனாதிபதியைச் சுற்றியுள்ளவர்கள் தம்மை விரட்டும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக குற்றஞ்சாட்டினார்.

பாசிச வாத பயணம் மேற்கொள்ளும் குழு இதில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். உலகின் ஒரு பாரிய அமைச்சரவையாக தற்போது இருக்கிற போதிலும் குறைந்த தொகை அமைச்சர்கள் தீர்மானம் எடுக்கின்ற நிலையே தற்போது காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இந் நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ தலைமையில், தான் அமைச்சுப் பொறுப்பை மீண்டும் ஏற்கப்போவதில்லை என்றும் மங்கள சமரவீர கூறினார். தான் எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் பின்வரி சை உறுப்பினராகச் செயற்படப் போவதாக தெரிவித்த அவர், ஜனாதிபதியை உரிய வழியில் இட்டுச் செல்வதற்காக பத்து யோசனைகளை முன்வைத்து அவருக்கு கடிதம் ஒன்றை அனுப்ப விருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

முன்பு எப்போதுமில்லாதவாறு சர்வதேச ரீதியாக நாம் தனிமைப்படுத்தப்படும் நிலைமையை நோக்கி சென்று கொண்டிருக்கின்றோம். ஜனாதிபதி சர்வதேச சமூகத்தை எவ்வாறு கையாள்வது என்ற தொடர்பில் தவறாக வழிநடத்தப்படுகிறார் என்பது போலத் தோன்றுவதாகவும் ,

விசேடமாக இங்கு தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டிருக்கும் மனித உரிமை மீறல் சம்பவங்கள், கொலைகள், ஆட்கடத்தல்கள் போன்ற சம்பவங்களினால் சர்வதேச ரீதியாக தமது இருப்பை இழந்து கொண்டு வந்த விடுதலைப்புலிகள் அமைப்பினர், இப்போது தமக்கு சாதகமான முறையில் புள்ளிகளைச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்றார்.

தான் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டமை தான் எதிர்பார்த்த ஒன்றுதான் எனத் தெரிவித்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளுக்கு அதற்கே உரிய பாணியில் நடவடிக்கை எடுக்கவேண்டிய அதேவேளை இனப்பிரச்சினைய்யை பேச்சுக்களினூடாக தீர்த்துவைப்பதற்கான அரசியல் தீர்வு நோக்கியும் அதே வேத்தில் நகரவேண்டியது இன்றியமையாதது என்று சுட்டிக்காட்டினார்.

நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் பதவி நீக்கம் செய்யப்பட்ட மற்றைய முன்னாள் அமைச்சரான சிறிபதி சூரியாராட்சியும் கலந்து கொண்டு தனக்கு முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் வடக்கில் உள்ள பிரபாகரனிடம் இருந்தும் தெற்கில் உள்ள பிரபாகரன்களிடம் இருந்தும் உச்சக் கட்ட உயிராபத்து இருப்பதால் விலக்கிக் கொள்ளப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை திரும்பத் தரவேண்டுமென்றும் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை இலங்கையை சரியான வழியில் இட்டுச் செல்வதற்கென தான் சுமார் 17 பக்கங்களில் பத்து முக்கிய விடயங்கள் அடங்கிய கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளதாக நேற்று அவர் தெரிவித்தார். (ச-3)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.02.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.